


**11.02.2025**

**தலைப்பு செய்திகள்**

- பாரீஸில் நடைபெற உள்ள செயற்கை நுண்ணறிவு உச்சிமாநாட்டில் பிரதமர் திரு.நரேந்திரமோடி இன்று பிற்பகல் சிறப்புரையாற்றுகிறார்.

- சைபர் குற்றங்கள் இல்லா நாடாக நம் தேசத்தை மேம்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா தெரிவித்துள்ளார்.

- பழங்குடியின மக்கள் வாழும் பகுதிகளில் மருத்துவ சேவைகள் விரிவுபடுத்தப்படும் என்று மத்திய சுகாதார அமைச்சர் திரு.ஜே.பி.நட்டா கூறியுள்ளார்.

- இலவச வேட்டி சேலைகளின் தரம் முழுமையாக ஆய்வு செய்த பின்னரே விநியோகிக்கப்பட்டதாக மாநில அமைச்சர் திரு.ஆர்.காந்தி தெரிவித்துள்ளார்.

- முருகப்பெருமான் ஆலயங்களில் தைப்பூச விழா இன்று பக்தி சிரத்தையுடன் கொண்டாடப்படுகிறது.

- டெல்லி ஓப்பன் டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு இந்தியாவின் **Mukund Sasikumar** முன்னேறியுள்ளார்.

**இனி விரிவான செய்திகள்**

**********

**பிரதமர் - ∴பிரான்ஸ்**

பாரீஸில் நடைபெறும் சர்வதேச செயற்கை நுண்ணறிவு உச்சிமாநாட்டில் பிரதமர் திரு.நரேந்திரமோடி இன்று பிற்பகல் உரையாற்றுகிறார்.

இன்னும் சற்று நேரத்தில் தொடங்க உள்ள இந்த மாநாட்டில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் தரத்தை முன்னெடுத்துச்சென்று பொறுப்புணர்வுடன் பயன்படுத்துவது குறித்து விரிவாக ஆலோசிக்கப்படுகிறது.

பிரதமர் திரு.நரேந்திரமோடி ∴பிரான்ஸ் அதிபர் மேக்ரானுடன் இணைந்து இந்த உச்சிமாநாட்டிற்கு தலைமை வகிக்கிறார்

நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளின் தலைவர்கள் இதில் பங்கேற்க உள்ளனர்.

இந்த மாநாட்டிற்கு பின்னர் இந்தியா - ∴பிரான்ஸ் நாடுகளுக்கிடையிலான இருதரப்பு பேச்சுவார்த்தைகளை பிரதமர் திரு.நரேந்திரமோடி ∴பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரானுடன் இன்றுமாலை மேற்கொள்கிறார்.

இந்திய ∴பிரான்ஸ் தலைமை நிர்வாக அதிகாரிகள் பங்கேற்கும் கூட்டத்திலும் இரு தலைவர்கள் கலந்துகொள்கின்றனர்.

இரு நாட்டு தலைவர்களின் பேச்சுவார்த்தையின் அடிப்படையில் பல்வேறு புதிய ஒப்பந்தங்களும் கையெழுத்தாக உள்ளன.

இதனை தொடர்ந்து வரலாற்று சிறப்பு வாய்ந்த **மார்ஷேலே** பகுதிக்கு செல்லும் பிரதமர் அதிபர் மேக்ரனுடன் இணைந்து பல நிகழ்ச்சிகளில் பங்கேற்க உள்ளார்.

இந்நிலையில் செயற்கை நுண்ணறிவு உச்சிமாநாடு தொடங்க உள்ள **கிராண்ட் பேலசில்** அனைத்து முன்னேற்பாடுகளும் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

பிரதமர் தமது ∴பிரான்ஸ் பயணத்தை முடித்துக்கொண்டு நாளை இரண்டு நாள் பயணமாக அமெரிக்கா புறப்பட்டு செல்கிறார்.

**********

**பிரதமர் எரிசக்தி**

இதனிடையே குஜராத் மாநிலம் துவாரகா யஷோ பூமியில் எரிசக்தி வார கொண்டாட்டங்களை இன்று காணொலி வாயிலாக துவக்கிவைத்து பேசிய பிரதமர், உலக அளவில் 3ஆவது பெரிய சூரிய மின்சக்தி உற்பத்தி நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது என்று தெரிவித்துள்ளார்.

புதை படிவமற்ற எரிசக்தி திறன் மும்மடங்காக அதிகரித்துள்ளது என்று மகிழ்ச்சி தெரிவித்துள்ள பிரதமர், ஜி-20 பாரீஸ் உடன்படிக்கையின் இலக்குகளை எட்டிய முதல் நாடு நம் தேசமாகும் என்றும் பெருமிதம் தெரிவித்தார்.

சர்வதேச வளர்ச்சியை இந்தியாவின் வளர்ச்சி முன்னெடுத்துச்செல்வதாக கூறிய அவர், இதில் எரிசக்தி முக்கிய பங்காற்றுவதாக எடுத்துரைத்தார்.

தற்போது 19 சதவிகித எத்தனால் கலப்பு மேற்கொள்ளப்படுவதால், கரியமில வாயு வெளியேற்றம் குறைந்து, விவசாயிகளுக்கு உரிய வருவாய் கிடைப்பதாக கூறினார்.

வரும் அக்டோபர் மாதத்திற்குள் 20 சதவிகித எத்தனால் கலப்பிற்கான பணிகள் மேற்கொள்ளப்படும் என்றார்.

இந்தியாவில் தயாரிப்போம் திட்டத்தால் உள்நாட்டு விநியோக சங்கிலி வலுப்பெற்று உற்பத்தியும் அதிகரிக்கும் என்று அவர் குறிப்பிட்டார்.

அடுத்த 20 ஆண்டுகளில் இந்தியா வளர்ச்சி அடைந்த நாடாக உருவாக, முக்கிய மைல் கல்கள் எட்டுவதற்கான பணிகள் விரைந்து மேற்கொள்ளப்படும் என்றார்.

*********

**குடியரசு தலைவர்**

குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு யுனானி தினத்தை ஒட்டி புதுதில்லி விஞ்ஞான் பவனில் இரண்டு நாள் சர்வதேச மாநாட்டை இன்று துவக்கிவைக்கிறார்.

மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திரசிங் உள்ளிட்ட பல்வேறு நாடுகளை சேர்ந்த யுனானி மருத்துவர்கள், கல்வியாளர்கள், இதில் கலந்துகொள்கின்றனர்.

“யுனானி மருத்துவம் மற்றும் ஒருங்கிணைந்த ஆரோக்கிய வாழ்வில் படைப்பாற்றல் திறன்” என்ற தலைப்பில் இந்த மாநாடு நடைபெறுகிறது.

பிரபல யுனானி மருத்துவரும், சுதந்திர போராட்ட வீரருமான ஹக்கிம் அஜ்மல் கானின் பிறந்த நாள் ஆண்டுதோறும் பிப்ரவரி 11ஆம் தேதி யுனானி தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

*********

**அமித்ஷா**

சைபர் குற்ற சவால்களை எதிர்கொள்ள 4 அம்ச நிலைப்பாடுகளுடன் மத்திய அரசு முன்னேறி செல்வதாக உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் “சைபர் பாதுகாப்பு, சைபர் குற்றங்கள்” தொடர்பான நாடாளுமன்ற ஆலோசனை குழு கூட்டத்தில் இன்று உரையாற்றிய அமைச்சர், ஒருங்கிணைப்பு, தொடர்பு, திறன்மேம்பாடு உள்ளிட்டவற்றின் மூலம் சைபர் குற்றங்கள் எதிர்கொள்ளப்படுவதன் அவசியத்தை எடுத்துரைத்தார்.

சைபர் குற்றங்கள் இல்லா நாடாக நம் தேசத்தை உருவாக்குவதற்கான முனைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக கூறிய அவர், 1 9 3 0 என்ற தொலைபேசி எண் குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும் என்றார்.

“சிந்தித்து செயல்படுவோம்” என்ற பிரதமரின் தாரக மந்திரத்தின் மூலம் சைபர் குற்றங்களை பெருமளவில் தடுக்க முடியும் என்றும் திரு.அமித்ஷா கூறினார்.

**********

**மாநிலங்களவை ஜே.பி.நட்டா**

பழங்குடியின பகுதிகளில் மருத்துவ சேவைகளை விரிவுபடுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருவதாக மத்திய சுகாதார குடும்பநலத்துறை அமைச்சர் திரு.ஜே.பி.நட்டா தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் கேள்வி ஒன்றுக்கு இன்று பதில் அளித்த அமைச்சர், இப்பகுதிகளில் பல்வேறு உடல்நல குறைபாடுகளை கண்டறிவதற்கான வலுவான மருத்துவ கட்டமைப்புகள் ஏற்படுத்தப்படும் என்றார்.

பல், மார்பகம் கருப்பை வாய் புற்றுநோய், நீரிழிவு, ரத்த அழுத்தம் போன்ற நோய் கண்டறியும் முகாம்கள் ஒரு லட்சத்து 45ஆயிரம் ஆயுஷ்மான் ஆரோக்கிய நல மையங்கள் மூலம் நடைபெறுவதாக அமைச்சர் தெரிவித்தார்.

பழங்குடியின பகுதிகளில் மருத்துவர்கள் பணியாற்ற ஊக்குவிக்கப்படுவதையும் அவர் எடுத்துரைத்தார்.

நாட்டில் பேறுகால இறப்பு விகிதம் குறைந்து வருவதாக **Lancet** சர்வதேச மருத்துவ இதழில் தெரிவிக்கப்பட்டிருப்பதையும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

**********

**மக்களவை - கமலேஷ் பாஸ்வான்**

பிரதமரின் சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் கடந்த 23 ஆண்டுகளில் நாட்டில் 7 லட்சத்து 72 ஆயிரம் கிலோ மீட்டர் நீள சாலைகள்

கட்டமைக்கப்பட்டுள்ளதாக மத்திய ஊரக மேம்பாட்டுத்துறை இணை அமைச்சர் திரு.கம்லேஷ் பாஸ்வான் கூறியுள்ளார்.

மக்களவையில் துணை கேள்விகளுக்கு இன்று பதில் அளித்த அவர், இந்த திட்டத்தால் ஒரு லட்சத்து 63 ஆயிரம் கிராம குடியிருப்புகளுக்கு சாலை இணைப்புகள், விரிவுபடுத்தப்பட்டுள்ளதாக கூறினார்.

இந்த திட்டத்தின் நான்காவது கட்டத்தின் கீழ் 25ஆயிரத்திற்கும் அதிகமான குடியிருப்புகளுக்கு சாலை இணைப்புகள் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

**********

**மக்களவை - நிர்மலா சீதாராமன்**

2025-26 ஆம் நிதியாண்டிற்கான மத்திய அரசின் நிதிநிலை அறிக்கை தொடர்பான விவாதத்திற்கு மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் மக்களவையில் இன்று பதில் அளிக்கிறார்.

மாநிலங்களவையில் வரும் வியாழக்கிழமை திருமதி நிர்மலா சீதாராமன் இவ்விவாதத்திற்கு பதில் உரை வழங்குகிறார்.

இரு அவைகளிலும் கடந்த 7-ஆம் தேதி முதல் இதுதொடர்பான விவாதம் நடைபெற்று வருகிறது.

**********

**ஆர்.காந்தி**

தமிழ்நாட்டில் பொங்கல் பரிசு தொகுப்பு திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட வேட்டி சேலைகளின் தரம் பல்வேறு நிலைகளில் முழுமையாக ஆய்வு செய்யப்பட்ட பின்னரே விநியோகிக்கப்பட்டதாக மாநில கைத்தறி துணி நூல் துறை அமைச்சர் திரு.ஆர்.காந்தி தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் இலவச வேட்டி சேலை திட்டம் தொடர்பான பிஜேபியின் குற்றச்சாட்டு உண்மைக்கு புறம்பானது என்று தெரிவித்தார்.

தமிழகத்தில் அனைத்து தரப்பு மக்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையிலேயே மாநில அரசின் நல திட்டங்கள் செயல்படுத்தப்படுவதாக கூறினார்.

**********

**கோவில்**

முருகப்பெருமான் ஆலயங்களில் தைப்பூச விழா இன்று பக்தி சிரத்தையுடன் கொண்டாடப்படுகிறது.

காவடி சுமந்தும், அலகு குத்தியும் பக்தர்கள் தங்களது நேர்த்திகடனை செலுத்தி வருகின்றனர்.

திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி,

ஈரோடு சென்னிமலை உள்ளிட்ட பல்வேறு திருக்கோவில்களில் பக்தர்கள் திரளாக குவிந்து சுவாமி தரிசனம் செய்தனர்.

திருப்போரூர் ஸ்ரீகந்தசாமி திருக்கோவில் சரவண பொய்கையில் பக்தர்கள் நீராடி முடி, துலாபாரம் காணிக்கை செலுத்தியும், பால்குடம் ஏந்தியும் தத்தம் பிரார்த்தனைகளை நிறைவேற்றி வருகின்றனர்.

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவிலில் தைப்பூச தேரோட்டம் இன்றுமாலை நடைபெறுவதை ஒட்டி அங்கு பக்தர்கள் கூட்டம் அலைமோதுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**வாய்ஸ்**

**கடலூர் மாவட்டம் வடலூர், வள்ளலார்** சத்தியஞான சபையில் 154-ஆம் ஆண்டு தைபூச ஜோதி தரிசனம் இன்று காலை 6 மணி, 10 மணி, பகல் 1 மணிக்கு 7 திரைகள் நீக்கி காண்பிக்கப்பட்டது.

இதேபோல் இன்று இரவு 7 மணி, இரவு 10 மணி, நாளை அதிகாலை 5.30 மணிக்கு ஜோதி தரிசனம் இடம்பெறும்.

ஏராளமான பக்தர்கள் ஜோதி தரிசனம் மேற்கொண்டு வருகின்றனர்.

**********

**எல்.முருகன்**

தைபூச விழாவை ஒட்டி மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் தமிழக மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இந்நந்நாளில் மக்கள் மகிழ்வுடனும், இறையருளுடன் மகிழ்ச்சியுடன் வாழ வாழ்த்தியுள்ளார்.

**********

**கன்னியாகுமரி கோவில்**

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் நாகாராஜா திருக்கோவில் தைத்தேர் திருவிழா இன்று வெகு விமரிசையாக நடைபெற்றது.

குமரி மாவட்டம் மட்டுமல்லாமல் நெல்லை தூத்துக்குடி உள்ளிட்ட அண்டை மாவட்டங்களிலிருந்தும் கேரள மாநிலத்திலிருந்தும் ஏராளமான பக்தர்கள் தேரை வடம்பிடித்தனர்.

தேரோட்டத்தை ஒட்டி கன்னியாகுமரி மாவட்டத்திற்கு இன்று உள்ளூர் விடுமுறை விடப்பட்டுள்ளது.

**********

**வானதி ஸ்ரீனிவாசன்**

கோவை சங்கமேஸ்வரர் திருக்கோவிலில் சிவராத்திரி தேர்திருவிழாவை மீண்டும் நடத்த வேண்டும் என்று பிஜேபி தேசிய மகளிர் அணித்தலைவர் திருமதி வானதி ஸ்ரீனிவாசன் கூறியுள்ளார்.

கோவையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் சங்கமேஸ்வரர் கோவிலுக்கு ராஜகோபுரம் கட்ட வேண்டும் என்ற கோரிக்கை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரிடம் ஓராண்டுக்கு முன்பு வைக்கப்பட்டதை சுட்டிக்காட்டினார்.

முன்னதாக இக்கோவிலில் முருகப்பெருமானுக்கு நடைபெற்ற தேரோட்டத்தில் திருமதி வானதி ஸ்ரீனிவாசன் வடம்பிடித்தார்.

**********

**கீதாஜீவன்**

சென்னை ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டரங்கில் குழந்தைகள் இல்லங்களில் தங்கியுள்ள மாணாக்கருக்கான மாநில அளவிலான விளையாட்டு போட்டிகளை மாநில சமூகநலன் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி. கீதாஜீவன் இன்று துவக்கிவைத்தார்.

**********

**நாகை கப்பல்**

நாகை - இலங்கை காங்கேசன் துறை இடையிலான கப்பல் போக்குவரத்து நாளைமுதல் மீண்டும் தொடங்குகிறது.

கடந்த சில நாட்களாக இயற்கை சூழல் தொடர்பான காரணங்களால் நிறுத்தப்பட்டிருந்த இந்த கப்பல் போக்குவரத்து சேவை கப்பல் பயணிகளின் வசதிக்காக மீண்டும் இயக்கப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**********

**ஜல்லிக்கட்டு**

மதுரை கீழக்கரையில் அமைந்துள்ள ஏறு தழுவுதல் அரங்கத்தில் ஜல்லிக்கட்டு போட்டிகளை மாநில வணிகவரி பதிவுத்துறை அமைச்சர் திரு.மூர்த்தி இன்று தொடங்கிவைத்தார்.

**********

**இருவரி**

ராணுவ ஆள்சேர்ப்பு பேரணி காஞ்சிபுரம் அறிஞர் அண்ணா விளையாட்டு திடலில் வரும் 15ஆம் தேதிவரை நடைபெற உள்ள நிலையில் திருச்சி மாவட்ட இளையோர் இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ளுமாறு ஆட்சித்தலைவர் திரு.மா.பிரதீப்குமார் கூறியுள்ளார்.

**********

**பனை மரம்**

ராணிப்பேட்டை சிப்காட் பகுதியில் நூற்றுக்கும் மேற்பட்ட கிளைகளுடன் உள்ள பனைமரம் அப்பகுதி மக்களை வெகுவாக கவர்ந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**********

**டென்னிஸ்**

டெல்லி ஓப்பன் டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு இந்தியாவின் **Mukund Sasikumar** முன்னேறியுள்ளார்.

முதல் சுற்று ஆட்டத்தில் ஃபிரான்சின் **ஷச்சாவை** இன்று தோற்கடித்து அடுத்த சுற்றுக்கு அவர் முன்னேறினார்.

மற்றொரு ஆட்டத்தில் இந்தியாவின் **Ramkumar Ramanathan –** செக் குடியரசின் **Dalibor-**ஐ தற்போது எதிர்கொண்டுள்ளார்.

**********

**பேட்மிண்டன்**

ஆசிய கலப்பு சேம்பியன் பட்ட பேட்மிண்டன் போட்டிகள் சீன கிங்டாவோவில் இன்று தொடங்கின.

இதில் இந்தியாவின் லக்ஷயா சென், மாள்விகா பன்சோத், H.S. பிரணாய் சாத்விக் சாய்ராஜ், ரான்கிரெட்டி, சிராக்ஷெட்டி உள்ளிட்டோர் களமிறங்குகின்றனர்.

**********

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**